

துறைமுகம் மேற்கு பகுதி 59 வட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி. கே. சேகர்பாபு ஆவின் பாலும், பிஸ்கட் பாக்கெட்டுகளையும் வழங்கினார். உடன் மாநகர மேயர் பிரியா ராஜனும் , பகுதி செயலாளர் எஸ். முரளி, ஐந்தாம் மண்டல குழு தலைவர் பி. ஸ்ரீராமுலு, தலைமை செயற்குழு உறுப்பினர் எம். விஜயகுமார், மாமன்ற உறுப்பினர்கள் வெ. பரிமளம், எஸ். ராஜேஷ் ஜெயின், வட்ட கழக செயலாளர் டி. சதீஷ்குமார் இருந்தனர்.

## சென்னையில் இன்று

## பள்ளி, கல்லூரிகள் வழக்கம் போல் செயல்படும்!

சென்னை,அக்.17-

வங்கக்கடலில் சென்னைக்கு அருகே நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை (அக்.17) அதிகாலை கரையைக் கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே நேரம் அதீத கன மழை பெய்வதற்கான வாய்ப்பில்லை என்பதால் ரெட் அலர்ட் எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து, சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளும் இன்று (அக்.17) வழக்கம்போல் செயல்படும் என மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

# சிந்தனைச் சிகரம் செல்வம் மறைந்தாரே...!



அன்பின் திருஉருவம்! அடக்கத்தின் மறுவடிவம்!
அறிவுப் பெட்டகம் ! எங்கள் செல்வம் அய்யா...
பண்பின் சிகரம் ! பணிவுக்கோர் இமயம்!
பிரிந்தார் என்பதை நம்பவே முடியவில்லை..!

செல்வமாய்க் கிடைத்திட்ட செல்வக் களஞ்சியம்!
சிந்தனைச் சிகரமா? நமைவிட்டு மறைந்தார்!
பல்வேறு ஆற்றலால் நமை வியக்க வைத்தவர்
பறந்துபோன திசைநோக்கி வணங்குகின்றேன்!

அதிர்ந்து பேசிட அறியாத மாமனிதர் எதையும்
அலசியே ஆராய்ந்து அடுத்தஅடி வைப்பார்!
உதிர்ந்து விட்டார் என்பதை உளம்ஏற்க மறுக்கிறது...
ஒவ்வொடு எழுத்துக்கரும் நெஞ்செல்வாம் மணக்கிறது...

“சிலந்தி”யெனும் புனைப்பெயரில் சித்திரங்கள் தீட்டி
சிந்திக்க வைத்தவர்! சீரிய எழுத்தாளர் !
மலைபோல விமர்சனக் கணைகளைத் தொடுத்து
மாற்றாரை திணறடித்து மலைக்கவே வைத்தவர்!

நாகரீகம் பேணிநின்ற நல்லவரின் இழப்பு-தமிழ்
நாட்டுக்கே இடிப்பு! நமதருமை முதல்வருக்கு
சோகத்தை தந்துவிட்ட சொல்லொணாப் பேரிழப்பு!
துணைமுதல்வரைப் பாதித்த தாங்கொணாப் பேரிழப்பு...!



முரசொலித்த எழுத்துக்கள் முடங்கியே விட்டது-நாளும்
முழங்கிய மூச்சோ அடங்கியே விட்டது
வரலாறாய் நம்மிடையே வலம் வந்த செல்வம் அய்யா
வாழ்ந்திருப்பார் எப்போதும் கலைஞரைப் போல !

-கவிஞர் இரவிபாரதி

## எழும்பூர் தொகுதியில் மழை நீர் வடிந்து

# இயல்பு நிலை திரும்புவதை இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆய்வு செய்தார்!

சென்னை,அக்.17-

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு தளபதி அவர்கள் பருவ மழையை எதிர்கொள்ள அளித்துள்ள வழிகாட்டுதலின்படி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்கள் 77, 78-குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிந்து இயல்பு நிலை திரும்புவதையும், அவ்வார்டுகளில் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகள் குறித்தும் இரண்டாவது நாளாக ஆய்வு செய்தார்.



77-வது வட்டம், டிமலஸ் சாலை, முனுசாமி தெரு கால்வாய், பழைய ஆட்டுத்தொட்டி தெரு, காட்டூர் நல்லமுத்து தெரு, சந்தியப்பா தெரு, அங்காளம்மன் கோவில் ஹண்டர்ஸ் தெரு, புளியந்தோப்பு நெடுஞ் சாலை, புளியந்தோப்பு 1, 2, 3, 4-ஆவது தெருக்கள், ராஜா தோட்டம், அன்சாரி தெரு, மோதிலால் நேரு தெரு மற்றும் மழை நீர் வெளியேறி வரும் காந்தி நகர் கால்வாய் பகுதியையும்;

78-ஆவது வட்டம், அவதான பாப்பையா சாலை, அஷ்டபுஜம் சாலை, ரெங்கையா தெரு, முருகேசன் தெரு, காஞ்சிபுரம் முனுசாமி தெரு, சித்தலு தெரு, மதுரை தெரு, சூளை அங்காளம்மன் கோவில் தெரு மற்றும் சூளை நெடுஞ்சாலை-வீ.வீ.கோவில் தெரு சந்திப்பு உள்ளிட்டு மேற்சொன்ன குடியிருப்புப் பகுதிகள் அனைத்திலும் மழை நீர் வடிந்து இயல்பு நிலை திரும்பி வருவதையும்;

முனுசாமி தெரு, அய்யாவு தெரு, காட்டூர் நல்லமுத்து தெரு ஆகிய தெருக்களில் வசிக்கும் பொதுமக்களுக்குத் தேவையான மதிய உணவு, பழைய ஆட்டுத்தொட்டித் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி 77-வது டிவிஷன் உதவிப் பொறியாளர் அலுவலகத்தில் தயாரிக்கப்படுவதையும்;

புளியந்தோப்பு நெடுஞ்சாலையிலுள்ள அரசினர் ஆதி திராவிடர் உயர்நிலைப்பள்ளி நிவாரண முகாமையும், அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள கனகராயன் தோட்டம் கால்வாய் பகுதி மக்களுக்கு உணவு, குடிநீர், பால் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் வழங்கப்படுவது குறித்தும் முகாமிலுள்ள வசதிகள் குறித்தும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது எழும்பூர் தொகுதி கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் உடனிருந்தனர்.



சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் பெரும்பாக்கம் ஊராட்சி உள்ள சமுதாய நல கூடத்தில் உணவு தயார் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ள உணவின் தரத்தை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண் ராஜ், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த ரமேஷ் எம்.எல்.ஏ , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அனாமிகா ரமேஷ் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்து உண்டு பார்த்தனர். மேலும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிகளை நேரில் சென்று ஆய்வு செய்தனர் . அதன் பிறகு மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஜி.வெங்கடேசன், ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரதிராஜன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் உடன் இருந்தனர்.

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரை!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!



நீலகிரி, அக். 17 -

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் இன்று (17.10.2024- வியாழக்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் பி.ஆர்.பரமேஸ்குமார் (கூடலூர்), தென்றல் செல்வராஜ் (உதகை) மற்றும் அ.திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

கழக தலைவர் - தமிழக முதல்வர் அவர்களால் நீலகிரி மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நிகழ்ச்சியில் கலந்து சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்: மாவட்டத்தில் கழக பவள விழா தொடர் நிகழ்ச்சிகள் குறித்து.

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு.

2026 சட்டமன்ற தேர்தலுக்காக பூத் கமிட்டி அமைத்தல்.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டலில் மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி, பகுதி செயலாளரும் நொளம்பூர் வே. ராஜன் எம்.சி. ஆகியோர் அறிவுறுத்தல்கள்படி வட்ட கழக செயலாளர் முகப்பேர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையில் மழையினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் கே.நீலகண்டன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன், மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழிலரசு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.ஜி. வேலன், டாக்டர் எம்.சி.அழகிரி ஏ.சுந்திரி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எம்.பி.நவராஜ் மற்றும் எம்.பி. நவகுமார் வட்ட கழக நிர்வாகிகள் எம்.எஸ்.சந்தானம் எஸ்.பாலாஜி எம்.ஜி.சுரேஷ் எ.லீலாவதிஎழிலரசு டி. புகழேந்தி எஸ்.ஆனந்தன் எம்.எஸ்.ஜெயசிம்மன் கே.முருகன் பி.நாகராஜ் கே..பிரகாஷ் எம்.பி.நவசுந்தர், வி. ஆர்.மகேந்திரன் சிவசக்தி பிரியா , சுரேஷ், சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி

# 144-வது வார்டில் மழைநீர் அகற்றும் பணிகள்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. மேற்கொண்டார்!

சென்னை, அக். 17 -

வடகிழக்கு பருவ மழை காரணமாக மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி வார்டு144, மதுரவாயல் ஓம் சக்தி நகர் கூவம் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு மண் அரித்து செல்லப்படுவதால் ஆற்றின் சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., பெருநகர சென்னை மாநகராட்சி, வட்டார துணை ஆணையர் (தெற்கு) எம்.பி..அமீத், ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

வடகிழக்கு பருவ மழை காரணமாக மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு144, மதுரவாயல் ஓம் சக்தி நகரில் உள்ள கூவம் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு மண் அரித்து செல்லப்படுவதால் ஆற்றின் சீரமைப்பு பணிகள் குறித்து நேற்று (16.10.2024) காலை 9.00 மணியளவில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, வட்டார துணை ஆணையர் (தெற்கு) எம்.பி.அமீத், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், , மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின், வட்ட கழக செயலாளர் சி.சசிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை ப. நாராயணசாமி

### அக்டோபர் 17 (1993)



‘தஞ்சை மாவட்ட பெரியார்’ என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது “பெரியார் விருது” பெற்றவர்.


கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். இராகவானந்தம்

### அக்டோபர் 17 (1999)



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.